**செ. கு. எண்: 118** **நாள்:30.09.2019**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்</u>**

**<u>தேசிய தன்னார்வ இரத்த தான நாள் செய்தி</u>**

இரத்தம் உயிரின் நாடி என்பதால், இரத்த தானம் செய்வது விலைமதிப்பற்ற மனித உயிரை காப்பாற்றும் புனிதமான செயலாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்த தான நாளாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்த தான நாளின் கருப்பொருள் **“வாழ்நாளில் ஒருமுறையாவது இரத்த தானம் செய்வோம்”** என்பதாகும்.

இரத்த தானத்தின் அவசியத்தை மக்கள் அனைவரும் அறிந்திடும் வகையில், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் மற்றும் தமிழ்நாடு மாநில குருதி பரிமாற்றுக் குழுமம் இணைந்து, தமிழ்நாட்டில் தன்னார்வ இரத்த தானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு இரத்த தானத்தை ஊக்குவிக்கும் வகையில், மாவட்டந்தோறும் “மீம்ஸ் போட்டி” நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் சிறப்பு பரிசுகளை வழங்கினார்கள். அத்துடன், ஆண்டுதோறும் தன்னார்வ இரத்த கொடையாளர்கள், சிறப்பாக பணியாற்றும் இரத்த தான முகாம் அமைப்பாளர்கள், அரசு இரத்த வங்கி ஊழியர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு, பாராட்டு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி கௌரவித்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தானமாக பெறப்படும் இரத்தத்தை சிறந்த முறையில் பாதுகாத்து பயன்படுத்தும் வகையில், இரத்த தான முகாம்களில் சேகரிக்கப்படும் இரத்தத்தை, இரத்த வங்கிகளுக்கு எடுத்து சென்று சேமிக்க, குளிர்சாதன வசதியுடன் கூடிய அதிநவீன நடமாடும் இரத்த ஊர்திகளை வழங்குதல், அரசு இரத்த வங்கிகளில் இரத்தத்தை சேமிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்களின் வெப்ப நிலையினை கண்காணிக்க டேட்டா லாக்கர் (Data Logger) பொருத்துதல், தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அரசு இரத்த வங்கிகளில் பணிபுரியும் ஆய்வக நுட்புனர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

இதன் காரணமாக, தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு அரசு மற்றும் தனியார் இரத்த வங்கிகள் மூலம் 9,16,929 அலகுகள் இரத்தம் சேகரிக்கப்பட்டு, தன்னார்வ இரத்த தானத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. நடப்பாண்டில் தன்னார்வ இரத்த தானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கை எய்திட, பொதுமக்கள் பெருமளவில் இரத்த தானம் செய்திட முன்வர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மகிழ்வுடன் இரத்த தானம் செய்திடுவோம்!
மனித உயிர்களை காத்திடுவோம்!!

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**